

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 39 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – புரட்டாசி 01 – வெள்ளிக்கிழமை 18 செப்டம்பர் 2026 – மதுரை 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 39 : Thiruvalluvar Year - 2057 - Purattasi 01 - Friday 18 September 2026 - Madurai 10 Pages ₹ 5.00





கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தந்தை பெரியார் அவர்களின் 148வது பிறந்த நாளான நேற்று, சென்னை – அண்ணா அறிவாலய வளாகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். மேலும் இந்நிகழ்வில் – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தந்தை பெரியார் பிறந்த நாளையொட்டி, “சமூக நீதி நாள் உறுதிமொழி”யைப் படிக்க, அண்ணா அறிவாலயத்தில் திரண்டிருந்த நூற்றுக்கணக்கான கழக முன்னோடிகளும், கழகத் தோழர்களும் கழகத் தலைவர் அவர்கள் படித்த அந்த “உறுதிமொழி”யைத் திரும்பக் கூறி, “சமூக நீதி நாள் உறுதிமொழி” எடுத்துக் கொண்டனர். கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., துணைப் பொதுச் செயலாளர்கள் க.பொன்முடி, ஆ.இராசா எம்.பி., கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தித் தொடர்புக் குழுத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், தலைமை நிலையச் செயலாளர் பூச்சி முருகன், மாவட்டச் செயலாளர்கள் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ., நே.சிற்றரசு, துணை அமைப்புச் செயலாளர் ப.தாயகம் கவி, கழக மருத்துவ அணிச் செயலாளர் டாக்டர் எழிலன் நாகநாதன் உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டதைப் படத்தில் காணலாம்.

## பேரறிஞர் அண்ணா விதைத்து – தலைவர் கலைஞர் வளர்த்து – நாம் காத்து நிற்கும்

# தமிழ்நாட்டின் தனித்துவத்தைப் பாழாக்கிட யாரையும் அனுமதியோம்!

## கழகம் 78–ஆம் ஆண்டில் அடியெடுத்து வைப்பதையொட்டி

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, செப்.18-**

**“பேரறிஞர் அண்ணா விதைத்து - தலைவர் கலைஞர் வளர்த்து - நாம் காத்து நிற்கும் தமிழ்நாட்டின் தனித்துவத்தைப் பாழாக்கிட யாரையும் அனுமதியோம்” என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கழகம் 78-ஆம் ஆண்டில் அடியெடுத்து வைப்பதையொட்டி தமது சமூக வலைதளத்தில் உறுதிபட பதிவிட்டுள்ளார்.**

இதுகுறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-

**மறுக்கப்பட்ட உரிமைகளை வென்றெடுத்து**

**மக்களுக்கான திட்டங்களைச் செயல்படுத்திய நமது திராவிட முன்னேற்றக் கழகத்தின் பயணம் 78ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது.**

**பேரறிஞர் அண்ணா விதைத்து தலைவர் கலைஞர் வளர்த்து நாம் காத்து நிற்கும் தமிழ்நாட்டின் தனித்துவத்தையும் வளர்ச்சியையும் பாழாக்கிட யாரையும் அனுமதியோம்!**

**மழையில் பிறந்து, புயல்களை வென்ற நாம், சமூகநீதி - சுயமரியாதை - தமிழ்நாட்டின் உரிமை உள்ளிட்டவற்றில் சமரசமின்றிக் களத்தில் நிற்போம்! பயணத்தில் வெல்வோம்!**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.




## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில்

# தி.மு.க. முப்பெரும் விழா - 19.09.2026 அன்று நடைபெறும்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 15.09.2026 அன்று நடைபெறவிருந்த தி.மு.க. முப்பெரும் விழா ஒத்திவைக்கப்பட்டு, தேதி பின்னர் அறிவிக்கப்படும் என்று அறிவித்ததையொட்டி, தற்போது தி.மு.க. முப்பெரும் விழா வருகிற 19.09.2026 (சனிக்கிழமை) அன்று மாலை 5.00 மணியளவில், அண்ணா அறிவாலயம், “கலைஞர் அரங்கில்” நடைபெறும்.**

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை - 600 018.
நாள்: 17.09.2026.

**தலைமைக் கழகம்**

